# சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் கழக அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி!

நம்முடைய வேணு அவர்களுடைய திருமணம் தலைவர் கலைஞருடைய தலைமையில் தான் நடைபெற்றிருக்கிறது. இன்றைக்கு அவருடைய பேரனுக்கு நடைபெறக்கூடிய இந்தத் திருமணத்தில் நான் கலந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

2021ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழா நடைபெற்றபோது, ஒவ்வொரு முப்பெரும் விழாவிலும், கழகத்திற்கு பணியாற்றிருக்கக்கூடிய தோழர்களுக்கு, தியாகம் செய்திருக்கக்கூடிய சீடர்களுக்கு விருதுகள் வழங்குவது வழக்கம். அந்த நிலையில் கலைஞர் விருதை யாருக்கு வழங்கலாம் என்று யோசித்த பார்த்தபோது, கடைசிவரையில், அவர் கலைஞர் அவர்களின் பக்தனாக இருந்து வாழ்ந்து மறைந்திருக்கிறார். அந்த வேணுவுக்குத்தான் வழங்கவேண்டும் என்று நாங்கள் தலைமைக் கழகத்தில் முடிவு செய்து அந்த விருதையும் அவருக்கு வழங்கியிருக்கிறோம். அந்த விருதைக்கூட அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் மேடையில் ஏறி பெற்று சென்ற காட்சி இன்னும் என்னுடைய நினைவில் இருக்கிறது. அப்படிப்பட்டவர் இவ்வளவு விரைவில் நம்மைவிட்டு மறைந்துவிட்டரே என்ற ஏக்கமும் நம்மிடத்தில் இருக்கிறது.

**மக்களுக்காக எப்போதும் பாடுபடும் இயக்கம் தி.மு.கழகம்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆட்சியில் இருந்தாலும், இல்லை என்று சொன்னாலும், மக்கள் பணியை பொறுத்தவரையில், நாம் என்றைக்கும் இருப்போம்; மக்களுக்காக பாடுபடுவோம்; பணியாற்றுவோம் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அதனால்தான், ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கு ஏராளமான திட்டங்களை, சாதனைகளை மக்களுக்காக செய்திருக்கிறது. என்னென்ன உறுதிமொழிகளை தந்தோமோ, தந்த உறுதிமொழிகள் மட்டுமல்ல, தராத திட்டங்களையும், வாக்குறுதிகளையும் இன்றைக்கு நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். மக்களால் போற்றப்படக்கூடிய ஒரு ஆட்சியாக இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் மக்களால் ஓரங்கட்டப்பட்டிருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் பொறாமை தாங்க முடியாமல், திராவிட முன்னேற்றக் கழகம் அரசு இப்படியெல்லாம் சாதனைகளை செய்து மக்களுடைய உள்ளத்தில் ஆழமாக பதிந்து கொண்டிருக்கிறதே; இன்னமும் அவர்களுடைய செல்வாக்கு வளர்ந்து கொண்டிருக்கிறதே என்கின்ற பொறாமையின் காரணமாக செல்லாக்காசாக இருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியினுடைய செல்வாக்கு சரிந்து கொண்டிருக்கிறது என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

அதோடு மட்டுமல்ல, தி.மு.க.வின் கூட்டணி விரைவில் உடையப்போகிறது; இதுவரை கற்பனையில் தான் மிதந்து கொண்டிருந்தார்என்றுநினைத்துக்கொண்டிருந்தேன். இப்போது அவர் ஜோசியராகவே மாறியிருக்கிறார். எப்போது அவர் ஜோசியராக மாறினார் என்று எனக்கு புரியவில்லை. விரக்தியின் எல்லைக்கே போயிருக்கிறார்.

ஜோசியம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த பழனிசாமி அவர்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, எங்களுடைய கூட்டணி என்பது தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி அல்ல; எங்களுடைய கூட்டணி என்பது பதவிக்கு வரவேண்டும் என்ற கூட்டணி அல்ல; எங்களுடைய கூட்டணி என்பது கொள்கை கூட்டணி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது!

எங்கள் கூட்டணிக்குள் விவாதம் நடக்கலாம்; எங்களுக்குள் பேச்சுக்கள் நடக்கலாம்; எங்களுக்குள் பல விவாதங்கள் நடக்கின்றபோது அதில் விரிசல் ஏற்பட்டுவிட்டது என்று யாரும் கருதிவிடக் கூடாது! விவாதங்கள் இருக்கலாமே தவிர விரிசல் ஏற்படவில்லை; விரிசல் ஏற்படாது. மிகவும் ஆவலாக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பக்கத்து வீட்டில் என்ன தகராறு என்று கவனித்துக் கொண்டிருப்பார்களே, அதுபோல இன்றைக்கு பக்கத்து கட்சியில்; தன்னுடைய கட்சியை எப்படி வளர்ப்பது என்ற யோக்கியதை இல்லை; வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய கட்சியைப் பார்த்து வளர்ந்து இன்றைக்கு மக்களிடத்தில் ஓங்கி கம்பீரமாக நின்று கொண்டிருக்கக்கூடிய நம்முடைய இயக்கத்தைப் பார்த்து, நம்முடைய அரசை பார்த்து, இன்றைக்கு ஜோசியம் பார்த்து கொண்டிருக்கக்கூடிய பழனிசாமி சொல்கிறார், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் மழைக் காலத்தில் மக்களை சந்தித்தோம். இப்போது ஆட்சி என்கின்ற அதிகாரத்தில் இருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கும் மக்களை சந்தித்து, மக்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்டறிந்து அந்தப் பணிகளை செய்கிறோம்.

> **“மக்களால் ஓரங்கட்டப்பட்டிருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் பொறாமை தாங்க முடியாமல், திராவிட முன்னேற்றக் கழகம் அரசு இப்படியெல்லாம் சாதனைகளை செய்து மக்களுடைய உள்ளத்தில் ஆழமாக பதிந்து கொண்டிருக்கிறதே; இன்னமும் அவர்களுடைய செல்வாக்கு வளர்ந்து கொண்டிருக்கிறதே என்கின்ற பொறாமையின் காரணமாக செல்லாக்காசாக இருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியினுடைய செல்வாக்கு சரிந்து கொண்டிருக்கிறது என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.”**

## தன்னுடைய கட்சியை வளர்க்க யோக்கியதை இல்லை!

## கம்பீரமாக வளர்ந்து நிற்கும் கழகத்தை பழனிசாமி குறை கூறலாமா?

**சென்னையில் பெரும் மழை வந்தபோது சேலத்துக்கு ஓடி பதுங்கினார் பழனிசாமி!**

சென்னையில் மழை வந்தது. முதலமைச்சராக நான் வந்தேன். துணை முதலமைச்சராக இருக்கும் தம்பி உதயநிதி வந்தார். அமைச்சர் பெருமக்கள் வந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெருத்தெருவாக வந்தார்கள். அதேபோல, ஊராட்சி, உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சியில் இருக்கக்கூடிய பிரதிநிதிகள் அத்தனைபேரும் மக்களைத் தேடி வந்தார்கள். குறைகளை கேட்டார்கள். பிரச்சினைகளை தீர்த்து வைத்தார்கள். இது தி.மு.க. ஆனால், மழை வந்தவுடன் சேலத்திற்கு சென்று பதுங்கியவர்தான் நம்முடைய பழனிசாமி அவர்கள். அதைப்பற்றி கவலைப்பட மாட்டார். ஆட்சியில் இருந்தாலும் வரமாட்டார். ஆட்சியில் இல்லாத நேரத்திலும் வரமாட்டார். ஏதோ கனவு கண்டிருக்கிறார். அதற்காக ஜோசியம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க.வை பொறுத்தவரைக்கும், கூட்டணி என்று சொன்னால், அது கொள்கை கூட்டணியாக மட்டுமல்ல, மக்கள் கூட்டணியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. கனவு காண வேண்டாம். உறுதியாக சொல்கிறேன். 2026 மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வரக்கூடிய எந்தத் தேர்தலாக இருந்தாலும் தி.மு.க.தான் வெற்றி பெறும் என்பதில் யாருக்கும் எந்தவித சந்தேகம் இருக்க வேண்டியதில்லை.

**பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயரை சூட்டுங்கள்!**


அந்த உணர்வோடு, தன்னுடைய வாழ்நாள் இறுதிவரையில் வாதாடி, போராடி, உழைத்திருக்கக்கூடிய வேணு அவர்களின் இல்லத்தில் நடைபெறக்கூடிய திருமண நிகழ்ச்சியில் இதை சொல்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சியோடு, மணமக்களை நான் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன். இன்றைக்கு மணமகனாக வீற்றிருக்கக்கூடிய மணமகன் பெயர் ஸ்டாலின், என்னுடைய பெயர் என்று சொல்வதைவிட ரஷ்ய அதிபராக இருந்த ஸ்டாலின்உடைய பெயர். இந்தப் பெயரை பொறுத்தவரைக்கும், இலட்சிய உணர்வோடு இந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த உணர்வோடுதான் எனக்கும் அந்தப் பெயரை வைத்தார். இன்றைக்கு வேணு அவர்களின் குடும்பத்தில் மணமகனாக வீற்றிருக்கக்கூடிய அந்தப் பேரனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டியிருக்கிறார். ஆனால் மணமகளுடைய பெயரை பார்க்கும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது; யுவஸ்ரீ என்றிருக்கிறது. பெயர் வைத்ததைப் பற்றி நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் உங்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள் என்று அன்போடு என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அந்த உணர்வோடு என்னுடைய வேண்டுகோளை வைத்து மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்கள் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் சொல்லியிருக்கக்கூடிய வீட்டிற்கு விளக்காய்; நாட்டிற்கு தொண்டர்களாய் வாழுங்கள்; வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.

---

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




---

ரெ. தங்கம் தலைமையில் - தமிழ்நாடு

## மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் நல உதவிகள் !

### ஆர்.எஸ்.பாரதி, த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன், பூச்சி எஸ்.முருகன் வழங்குகின்றனர்!

சென்னை, அக்.25-

தீப ஒளி திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் அதன் மாநில தலைவர் ரெ.தங்கம் தலைமையில் நாளை (26.10.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் தக்கர் பாபா வித்யாலயா வளாகம், வெங்கட் நாராயண ரோடு தி.நகரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சங்க மாநில பொதுச் செயலாளர் பி. சந்தானகிருஷ்ணன், சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் டி.பி.ரமேஷ்,சங்க வடசென்னை மாவட்ட தலைவர் ஆர்.ஹரி கணேஷ்,சங்க மாநில பொருளாளர் லயன் தி. நகர் பா.சக்திவேல், சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் கே. இளங்கோவன்,தென் சென்னை மாவட்ட செயலாளர் வேளச்சேரி கே.பத்மநாபன்,சங்க வடசென்னை மாவட்ட செயலாளர் வி.தர்மலிங்கம், தென்மேற்கு மாவட்ட கழக மகளிர் அணி துணை அமைப்பாளர் சரிதா தங்கம்,சங்க தென் சென்னை மாவட்ட பொருளாளர் ஆர். சீனிவாசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த வேலு எம் எல் ஏ தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தலைமை நிலைய செயலாளர்,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ். முருகன், ஜே கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், எம்.சி,பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலைஎம்.சி, நந்தனம் கி.மதி எம்.சி. எஸ். முரளி, கோ.சு.மணி பொதுக்குழு உறுப்பினர்,ஜெ. ஜானகிராமன்,வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் எஸ். லட்சுமிகாந்தன், ஆர்.நெடுஞ்செழியன், கா. குமரேசன்,கம்பம் சாதிக்,வீர. சரவணன்,வி.கிருஷ்ணமூர்த்தி, அபுசூதனன்,கே.காந்தி, பொன். கதிரேசன்,ஏ. ரஹ்மத்துல்லாஹ், பா.பிரசாந்த்,கே. துரைராஜ், ஜே. துரை பாபு இரா கோவிந்தராசு, ஆர். லட்சுமண பெருமாள்,வி. ராஜா,வே. ராஜி,பி.பவானி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். என்.ரவிச்சந்திரன்,எம். பெருமாள்,எம். பெரிய சாமி,ஏ.மோகன் ராஜ்,எஸ்விவேக்,எம்.சுந்தர தேவன், டீ.ஜோஸ்வா, எச்.சரஸ்வதி,சி. மனோகரி, ஆர்.பச்சையம்மாள், எஸ்.ஜெயபாரதி,மீனா ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

---

தமிழ்நாட்டிலேயே - பால் உற்பத்தி மற்றும் விற்பனையில்

## சேலம் ஆவின் நிறுவனம் முதன்மை ஒன்றியமாக விளங்குகிறது!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், அக்.25-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆவின் சார்பில் தீபாவளி பண்டிகை இனிப்பு கார வகைகள் சிறப்பு விற்பனையினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி முன்னிலையில் நேற்று முன்தினம் (23.10.2024) மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைத்தார்.



பின்னர் சுற்றுலாத்துறை அமைச்கர் தெரிவித்ததாவது :-

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தரம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் பால் விற்பனையில் தமிழ்நாட்டின் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, பால் உப பொருட்களான வெண்ணெய் நெய் நறுமணப் பால், தயிர், ஐஸ்கிரீம் வகைகள் உள்ளிட்ட பல்வேறு பால் பொருட்களையும் சிறந்த தாத்தில் விற்பனை செய்து வருகிறது.

குறிப்பாக, சேலம் ஆவின் நிறுவனம் தமிழ் நாட்டிலேயே பால் உற்பத்தி மற்றும் விற்பணையில் முதன்மை ஒன்றியமாக விளங்குவ தோடு, சுகாதார மான முறையில் தயார் செய்யப்பட்ட பால் மற்றும் பால் உபபொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. கடந்தாண்டு சேலம் ஆவினில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 37 டன் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை இனிப்பு, கார வகைகள் சிறப்பு விற்பனை இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆவின் பொது மேலாளர் பி.குமரேஸ்வான் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தாலுகா – அவலூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டிகளை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் தி.வேல்முருகன் (பண்ருட்டி) பல்வேறு துறைகளின் மூலம் வழங்கப்பட்ட அரசு உறுதி மொழிகளின் தற்போதைய நிலை குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், குழு உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், (சோழிங்கநல்லூர்), இரா.அருள் (சேலம் மேற்கு), ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் (விருதுநகர்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), சா.மாங்குடி (காரைக்குடி), எம்.கே. மோகன் (அண்ணா நகர்), கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதி மணி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ்கான் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.